# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# இந்திய செய்தி மடல்

ஜனவரி 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 2


அன்பு சகோதர சகோதரிகளே,
வணக்கம்

செய்தி மடலின் முதல் இதழுக்குக் கிடைத்த மகத்தான வரவேற்பிற்கு உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். செய்தி மடலின் தரத்தை உயர்த்த செய்தி மடல் பற்றிய உங்கள் எண்ணங்களும், கருத்துகளும் மிகவும் இன்றியமையாததால் அவற்றை எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். மாஸ்டரின் ஹைதராபாத் பயணம், வசந்த பஞ்சமி விழா கொண்டாட்டம், கொல்கத்தா ஆசிரமத்தின் தனிச்சிறப்பு ஆகிய விஷயங்கள் தற்போதைய மலரின் சிறப்பு அம்சங்களாகும்.

மே மாத இதழுக்கான செய்தி கட்டுரைகளைப் பெறுவதற்கான கடைசி நாள் 2008ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதியாகும். தயவுசெய்து உங்கள் விரிவான செய்தி விவரங்களை அந்த நிகழ்வின் புகைப்படத்துடன் உங்கள் மண்டல பொறுப்பாளரின் மூலமாக அனுப்பி வையுங்கள்.

அன்புடன்
ஆசிரியர் குழு



## சென்னையில் பொங்கல் திருவிழா



பொங்கல் திருவிழா தென்னிந்திய மாபெரும் விழாக்களில் ஒன்றாகும். அது அறுவடை காலத்தில் அறுவடையின் செழிப்பை உணர்த்தும் வகையில் பாரம்பரியமாக கொண்டாடப்படுகிறது. இந்த விழாநாட்களில் மாஸ்டர் சென்னையில் இருப்பார் என்று எதிர்பார்த்து நாடு முழுவதிலிருந்தும் அப்யாசிகள் பொங்கல் விழாவிற்காக சென்னை வந்திருந்தனர். பொங்கலுக்கு முன்றைய தினம் காலை சத்சங்கத்திற்குப் பிறகு மாஸ்டர் இரண்டு ஒலிநாடாக்களை வெளியிட்டார்.

பொங்கல் தினத்தன்று விழாவிற்காக வருகை புரிந்திருந்த 4000த்திற்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். மாலையில் சகோதரர் ஷஷாங்கின் புல்லாங்குழல் இசைக் கச்சேரி நடைபெற்றது. மாஸ்டர் அதை செவிமடுத்து ஆழ்ந்து ரசித்து மகிழ்ந்தார்.

## ஹைதராபாத்தில் மதிப்பிற்குரிய நம் மாஸ்டரின் வருகை



பொங்கல் திருவிழாவிற்குப் பிறகு மாஸ்டர் கொல்கத்தா மற்றும் ஹைதராபாத்திற்கு ஒரு சிறிய பயணத்தை மேற்கொண்டார். அவர் ஜனவரி 18லிருந்து 25 வரையில் கொல்கத்தாவிலும், ஜனவரி 25லிருந்து 28 வரையில் ஹைதராபாத்திலும் பயணம் செய்தார்.

ஹைதராபாத்தில் தும்குண்டாவிலிருந்த ஆசிரமத்திற்கு மதிப்பிற்குரிய மாஸ்டர் வருகை புரிந்தபோது ஆயிரக்கணக்கான அப்யாசிகளால் வரவேற்கப்பட்டார். 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சத்சங்கத்திற்குப் பிறகு அவர் நான்கு திருமணங்களை நடத்தி வைத்தார். பிறகு சிறுவர்கள் மையத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அங்கிருந்த குழந்தைகளிடம் பேசியபோது, அவர்கள் நன்கு படிக்கவேண்டும் என்றும், அனைவரிடமும் உண்மையாகவும், கீழ்படிதலுடனும், அன்புடனும் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



மதிப்பிற்குரிய மாஸ்டர் அங்கே மிகுந்த ஓய்வுடனும், மகிழ்ச்சியுடனும் இருந்தார், தினமும் தன் காட்டேஜுக்கு வெளியே அப்யாசிகளுடன் அமர்ந்து சகஜ மார்க்க பயிற்சியிலுள்ள பல்வேறு இன்றியமையாத அம்சங்களைத் தெளிவுபடுத்துவதில் ஒருமணிக்கும் அதிகமான நேரத்தைச் செலவிட்டார். மொத்தத்தில் நீண்ட காலமாக மாஸ்டரின் ஹைதராபாத் வருகைக்குக் காத்திருந்த 7500க்கும் மேற்பட்ட அப்யாசிகள் இதில் கலந்துகொண்டனர்.



மதிப்பிற்குரிய மாஸ்டர் ஹைதராபாத்திலிருந்து 28ம்தேதி மாலை புறப்பட்டு சென்னை பாபூஜி மெமோரியல் ஆசிரமத்திற்கு திரும்பி வந்தார்.

## சென்னையில் வசந்த பஞ்சமி விழா

சென்னையில் நமது ஆதிகுரு மதிப்பிற்குரிய லாலாஜி மகராஜின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. வசந்த பஞ்சமிக்கு முதல்நாள் மாஸ்டர் காலை சத்சங்கம் நடத்தி 12 திருமணங்களை நடத்தி வைத்தார். சுமார் 3500 அப்யாசிகள் அதில் கலந்துகொண்டனர். வசந்த பஞ்சமி நாளன்று அவருடன் இருப்பதற்காக சென்னை வந்திருந்த 4000க்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். மாலை சத்சங்கம் சகோதரர் அஜய் பட்டரால் நடத்தப்பட்டது. அதன் பிறகு சகோதரி ப்ரியா ராமன் அவர்களின் கர்னாடக சங்கீத இசைக் கச்சேரி நடைபெற்றது.




மதிப்பிற்குரிய மாஸ்டர், "சிலந்திவலை"மூன்றாம் பாகத்தின் கன்னட மொழிபெயர்ப்பை அன்புடன் வெளியிட்டார். அந்த சந்தர்ப்பத்தையொட்டி பெங்களூர் சகோதரர் Y.K. வியவநாத் சிலந்தி வலையின் மூன்று பாகங்களையும் மொழிபெயர்க்கின்றபணி தனக்கு அருளப்பட்டதற்காக தன் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

### சத்கோல் 2008 கோடைக்கால குழுக்கள்

2008ம் ஆண்டின் (220-231 வரையிலான) கோடைக்கால குழுக்களுக்கான சத்கோல் விண்ணப்பங்கள் தற்போது ஆன்லைனில் http://www.srcm.info/satkhol//satkhol_home.htm கிடைக்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்ணயிக்கப்பட்டுள்ள குழுவைத்தவிர வேறு எதற்கும் விண்ணப்பிப்பது சாத்தியமில்லை என்பதை கவனியுங்கள். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு முதலிடம் என்ற அடிப்படையில் விண்ணப்பங்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்வதற்கு **முன்,** குறிப்புகளை தயவுசெய்து கவனமாக படிக்கவும்.

கணிப்பொறி வலையை அணுக வாய்ப்பில்லாதவர்கள் தங்கள் மையப் பொறுப்பாளரின் உதவியை நாடலாம். எந்த ஒரு வினாவிற்கும் விடைகாண +9144 2252 1099 அல்லது +9144 4217 1111 விரிவு 218 எனும் தொலைபேசியில் பகல் 10 மணியிலிருந்து 12 மணிவரை அல்லது பிற்பகல் 3 ருந்து 4.30 மணிவரை சத்கோல் நிர்வாக அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

### 'அவர் ஹுக்கா மற்றும் நான்

ஏராளமான அப்யாசிகளின் வேண்டுகோளின் அடிப்படையிலும், மதிப்பிற்குரிய மாஸ்டரின் அனுமதியுடனும் இந்த டிவிடி தொகுப்பு மறுபடியும் தயாரிக்கப்பட்டு வருகிறது. டிவிடிக்கள் வந்த உடன் வினியோகம் ஆரம்பிக்கப்படும்.

இந்த சிறப்பு வெளியீட்டிற்கு சந்தா அளிக்க விரும்பும் அப்யாசிகள் தயவுசெய்து தங்கள் மைய ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும். மேலும் விளக்கங்கள் தேவையென்றால் தயவுசெய்து whq.publications@srcm.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

### கன்னட மொழியில் "அவர் ஹுக்கா மற்றும் நான்'

கன்னட மொழி பேசும் அப்யாசிகளுக்காக "அவர் ஹுக்கா மற்றும் நான்' என்பதை புத்தக வடிவில் கன்னடத்தில் மொழிபெயர்த்து வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இது ஒருமுறைமட்டுமே வெளியிடப்படும் சிறப்பு புத்தகம் என்பதால் கார்பஸ் உறுப்பினர்களுக்கு வினியோகிக்கப்படாது. இது வரப்போகும் 24 ஜுலை 2008 மாஸ்டரின் பிறந்தநாள் விழாவின்போது வெளியிடப்படும்.

புத்தகத்தின் விலை ரூ 200 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்பணம் செலுத்துவதற்கான கடைசி நாள் 30 ஏப்ரல் 2008 ஆகும். 01 மே 2008 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பணம் கட்டுபவர்கள் ரூ 300 கொடுக்க வேண்டும்.

## மதிப்பிற்குரிய மாஸ்டரின் 81வது ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டம்

### லக்னோ உ.பி. இந்தியா ஜுலை 23, 24, 25 - 2008

இந்த குதூகலமான சந்தர்ப்பத்தை லக்னோ மாநகரில் கொண்டாட நாம் மீண்டும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். நமது மதிப்பிற்குரிய மாஸ்டரின் 81வது ஆண்டு நிறைவின் மங்களகரமான விழாவைக் கொண்டாடவும், அவரது தெய்வீக மற்றும் பௌதீக ராஜ்ஜியத்தில் ஆசீர்வதிக்கப்படவும் நாம் அனைவரும் கூடி இருக்கப்போகிறோம்.

விழாவின் நிர்வாகக்குழு உலகெங்கிலுமுள்ள அனைத்து அப்யாசிகளின் சார்பாக அவரின் தெய்வீக பிரசன்னத்தில் திளைத்திருக்கும் இத்தகைய அருமையான வாய்ப்பை நமக்கு அளித்ததற்காக நமது மதிப்பிற்குரிய மாஸ்டருக்கு நன்றியை தெரிவிக்கிறது. நம்மில் ஏராளமானவர்கள் இந்த விழாவில் கலந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

விழா ஸ்ரீராம் சந்த்ர மிஷன் மற்றும் சகஜ மார்க்க ஆன்மீக ஸ்தாபனத்தின் (SMSF) ஆதரவின்கீழ் நடைபெறவிருக்கின்றது. அனைத்து அப்யாசி சகோதரி சகோதரர்களும் இந்த மாபெரும் விழாவில் கலந்துகொண்டு அவருடைய அன்பிலும், அருளிலும் பங்குகொள்ள வரவேற்கப்படுகிறார்கள்.

அன்புடன்,
விழா குழு அங்கத்தினர்கள்

தயவுசெய்து விழாவைப்பற்றிய இன்னும் அதிக விவரங்களுக்கு உங்கள் ஊர் மையத்தையோ அல்லது பிரசெப்டரையோ தொடர்பு கொள்ளுங்கள். இந்த விழாவின் சுற்றறிக்கை, படிவங்கள் மற்றும் தகவல்கள் மிஷனின் வெப்சைட்டிலும் கிடைக்கும். Http://www.srcm.org/members/24july2008/index.jsp

## சமீபத்தில் வெளியிடப்பட்ட MP3 சிடிக்கள்



கீழ்க்கண்ட MP3 சிடிக்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. அவை ஒலி, ஒளிநாடா கார்பஸ் உறுப்பினர்களுக்கு அவர்களின் மைய ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக வினியோகிக்கப்பட உள்ளது.

பாபூஜி மெமோரியல் ஆசிரமம், மணப்பாக்கம், சென்னை இந்தியாவிலும், உங்கள் மைய ஒருங்கிணைப்பாளரின் மூலமாகவும் அவை விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

1. **மாஸ்டரின் சொற்பொழிவுகள்**, MP3 தொடர் - பாகம் 5 - 1989 ஸ்ரீ பா. ராஜகோபாலாச்சாரி அவர்களால் அளிக்கப்பட்ட காலவரிசைக்கிரம சொற்பொழிவு தொடரின் தொடர்ச்சி. அதில் 1989ம் ஆண்டு இந்தியாவிலும் அவருடைய ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பயணங்களின்போதும் மாஸ்டரால் அளிக்கப்பட்ட 27 சொற்பொழிவுகள் உள்ளன.

2. **இதய வாக்கு 2005**
இதில் 2005ம் ஆண்டில் இந்தியாவிலும், ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் டென்மார்க்கிலும் மாஸ்டர் அளித்த 22 சொற்பொழிவுகள் உள்ளன.

## Constant Remembrance ஜனவரி 2008



Constant Remembrance 2008-ன் முதல் இதழ் சமீபத்தில் வெளியிடப்பட்டது. அது தற்போது சந்தாதாரர்களுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது.

## நெய்வேலியில் வரவேற்புக் கூட்டம்




நெய்வேலி நகரம் என்றாலே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி மாநகராட்சி என்று கொள்ளலாம். தமிழ்நாட்டின் மின்சார சேமிப்பின் பெரும்பகுதி அங்குள்ள ஏராளமான திறந்தவெளி நிலக்கரி சுரங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அநேகமாக நெய்வேலி நகரம் முழுவதிலுமே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி மாநகராட்சியில் வேலை செய்யும் 18,000 நபர்களும் அவர்களது குடும்பங்களும் வசிக்கும் குடியிருப்பு வளாகங்களே உள்ளன. இக்குடியிருப்பு நகரத்தில் வாழ்க்கை நிதானமான வேகத்தில் இயங்குகிறது. குடியிருப்பு வாசிகள் சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் தம்மை நன்கு ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இத்தகைய சூழலில், கடந்த சில வருடங்களாக, மத மற்றும் ஆன்மீக ரீதியான நடவடிக்கைகளில் இந்த நகரத்தின் ஈடுபாடு அதிகரித்திருப்பதில் வியப்பேதுமில்லை.

நெய்வேலியில் ஸ்ரீராம் சந்தர மிஷனின் மையம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஒரு பள்ளியில் கூடுகிறது. 50 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்துகொள்கிறார்கள். 26 ஜனவரி 2008 ஞாயிற்றுக்கிழமையன்று தெலுங்கு சமிதியில் ஒரு வரவேற்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்யாசிகள் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களை அழைத்து வந்திருந்தனர்.

சகோதரர் சி. ராஜகோபாலன் சகஜ மார்க்கம் எதை அளிக்கிறது என்பதைப் பற்றியும் சுத்திகரிப்பு, பிராணாஹுதி மற்றும் இப்போது நம்முடன் இருக்கும் மாஸ்டரின் உதவி மற்றும் வழிகாட்டுதல் போன்ற பிரத்யேகமான அம்சங்கள் எவ்வாறு சகஜ மார்க்கத்தை செயல்திறன் மிக்கதாக ஆக்குகிறது என்பதைப் பற்றியும் 50 நிமிடங்கள் தமிழில் உரையாற்றினார். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தங்கள் வாழ்க்கையில் சகஜ மார்க்கத்தை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற நேரிடையான கேள்விகள் கேட்டது, அவர்கள் சொற்பொழிவை எந்த வகையில் கிரகித்துக் கொண்டார்கள் என்பதை வெளிப்படுத்தியது. கேள்விகளுக்கு சகோதரர், அமைதியான சமநிலைப் பாங்குடன், உள்ளத்தில் ஆழப் பதியும் விதத்தில் அனுபவ பூர்வமாக பதிலளித்தது அக்கூட்டத்தின் சிறப்பு அம்சமாக இருந்ததுடன், கூட்டத்தில் கலந்துகொண்டவர்களை அதிகமாக ஈர்ப்பதாகவும் இருந்தது. கூட்டத்திற்கு வருகைபுரிந்த 60 நபர்களில் 40 பேர் அந்த மாலை வேளையிலேயே பயிற்சியை ஆரம்பித்தனர். இரவு உணவிற்காக வீட்டிற்குச் சென்று, பிறகு தங்கள் அறிமுக சிட்டிங்கை எடுத்துக் கொள்ள அனைவரும் திரும்ப வந்ததும், தங்கள் முறை வரும்வரை இரவு வெகுநேரம் காத்திருக்க விருப்பம் தெரிவித்ததும் காண்பதற்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்த நிலக்கரி சுரங்கமுள்ள நகரத்தில் நன்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்விற்கு இதயத்திற்கு இதமளிக்கும் வரவேற்பு இருந்தது, மென்மேலும் ஏராளமான இதயங்கள் வைரம் போல் சுடர்விட்டு பிரகாசிக்க விழைகின்றன என்கின்ற நன்து நம்பிக்கையை மீண்டும் புதுப்பித்துள்ளது.

*ஸ்ரீராம் ராகவேந்திரன், சென்னை*

## நன்னெறி அடிப்படையிலான நீண்ட கால ஆன்மீக கல்வி முகாம்

**விமானப்படைப் பள்ளி, பங்களூரு (2006-2008)**

பங்களூரிலுள்ள நன்னெறி அடிப்படையிலான ஆன்மீக கல்விக் குழு ஒருநாள் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீக கல்வி பயிற்சி முகாமை மாநகரிலுள்ள ஏராளமான பள்ளிகளில் நடத்தியது. அதனை, நீண்டகால முறையில் செயல்படுத்தும் முகாமை துவக்கி அதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இரு சாராருமே தீவிரமாக பங்கு கொண்டு செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

பங்களூரின் விமானப்படை பள்ளியில் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி அந்த பள்ளியில் ஆங்கில ஆசிரியராக இருந்த ஓர் அப்யாசியின் முயற்சியால் 2006ம் ஆண்டு துவக்கப்பட்டது. அறிமுக நிகழ்ச்சிக்குப் பிறகு மேலும் அதைப் பின்பற்றி நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. ஒன்றிலிருந்து ஐந்து வரையிலான வகுப்புகளுக்கு பள்ளி ஆண்டு 2006-2007ல் நன்னெறி கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இதனை 3-4 மாதங்களுக்கு, ஆர்வமுள்ளவர்கள் தானே முன்வந்து கையாளலாம் என்றும் அதன்பிறகு வகுப்பு ஆசிரியர்களே தொடர்ந்து செயல்படுத்த, பொறுப்பை அந்தந்த வகுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைத்துவிடலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஸ்மிருதியின் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி புத்தகங்கள் ஆலோசனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு வகுப்பையும் ஒரு தன்னார்வத் தொண்டர் நடத்த, அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் பார்வையாளர்களாக இருந்தனர்.

வகுப்புகள் விளக்கங்கள் மற்றும் செயல்முறைகள் மூலமாக சுவாரஸ்யமிக்கதாக ஆக்கப்பட்டன. குழந்தைகள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதை அவர்கள் மிகவும் குதூகலத்துடன் வரவேற்றனர். நான்கு மாதங்களுக்குப் பிறகு அந்த முகாம் 'நன்னெறி அடிப்படையிலான விஞ்ஞானக் கண்காட்சி'யுடன் முடிவு பெற்றது. மாணவர்கள் தங்கள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் பல கருத்துக்களை விளக்கினர்.



அடுத்த பள்ளி ஆண்டில் அதாவது 2007-08ல் நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி ஆறிலிருந்து பத்து வரையிலான வகுப்புகளுக்கு சுமார் மூன்று மாதங்கள் நடைபெற்றது. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு தன்னார்வத் தொண்டருடன் பார்வையாளராக அந்தந்த வகுப்பு ஆசிரியரும் இருந்தார்கள். இந்த முறை ஆசிரியர்களும் பயிற்சிபெறவேண்டும் என்பதற்காக சில வகுப்புகளுக்குப் பிறகு ஆசிரியர்களும் பாடம் நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாணவர்களுடன் வெளிப்படையான விவாதங்களும் பல்வேறு வகையான செயல்முறைவிளக்கங்களும் நடைபெற்றது வகுப்புகளில் நடைபெற்ற சிறப்பு அம்சமாகும்.

பள்ளிவருடக் கடைசியில் தங்களின் பள்ளியில் இப்படிப்பட்ட இயக்கம் இருப்பதை பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

*துளசி அரோரா, சரோஜா ஸ்ரீனிவாசன், R. மாதுரி - பங்களூரு*



## வரவேற்பு கூட்டங்கள்



**சந்தனா கிராமம்**
ராய்ப்பூரிலிருந்து 140 கிலோமீட்டர் தூரத்திலுள்ள சந்தனா கிராமத்தில் 25 டிசம்பர் 07 அன்று ஒரு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. இந்த கிராமம் எங்கோ ஒரு மூலையில் ஒதுக்குப்புறமாக இருக்கிறது. அங்கே பயிற்சி செய்யும் அப்யாசிகள் எவருமில்லை. 40 நபர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். அவர்களில் 39 நபர்கள் நம் மார்க்கத்தில் சேர்ந்தனர்.
சந்தனா கிராமத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்திலுள்ள பஸனா கிராமத்தில் 25 டிசம்பர் 07 அன்று ஒரு சிறிய கூட்டம் நடைபெற்றது. 8 நபர்கள் அதில் கலந்துகொண்டனர். 6 நபர்கள் மார்க்கத்தில் சேர்ந்தனர்.



**பிலாஸ்பூர் மையம்**: 1 டிசம்பர் 2007 அன்று பிலாஸ்பூர் மையத்தில் ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. 114 நபர்கள் கலந்துகொண்டனர். 6 நபர்கள் வரவேற்புக் கூட்டத்திற்குப் பிறகு மார்க்கத்தில் சேர்ந்தனர்.

விசாகப்பட்டினம் அருகே **ரஜாம்** எனும் இடத்தில் உள்ளூர் வழக்கறிஞர்களுக்காக வரவேற்புக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 45 வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.
**விசாகப்பட்டினம்** அருகே துணி எனும் இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்புக் கூட்டத்திற்கு உள்ளூர் வியாபாரிகளையும் சேர்த்து 60 நபர்கள் கலந்துகொண்டனர்.
**கர்நூல்** உள்ளூர் பொறியியல் கல்லூரியிலுள்ள பெண்கள் விடுதியில் வரவேற்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 180க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.
**மந்தமாரி**: இளைஞர்களுக்கான ஒரு வரவேற்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. 43 இளைஞர்கள் அதில் பங்கேற்றனர்.
**கரீம் நகர்**: சிர்சிலா மண்டலில் ராகாடு எனும் இடத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் 55 கிராமவாசிகள் பங்கேற்றனர்.
**ருகாதாவரிக்கனி**: உள்ளூர் ஆசிரியர்களுக்கான வரவேற்புக் கூட்டத்தில் 20 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.
**அனந்தபூர்**: சங்கமித்ரா சுற்றுலா மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் 20 பேர் பங்கேற்றனர்.

## சேவைபுரிய ஆர்வமுடைய மருத்துவர்களுக்கான அழைப்பு (ஆங்கில மருத்துவம் மட்டுமே)

இலவச மருத்துவ மையம். பாபூஜி மெமோரியல் ஆசிரமம், மணப்பாக்கம், சென்னை.
1999 லிருந்து இயங்கி வருகின்ற இலவச மருத்துவ மையமானது 14-1-2005 அன்று ஆசிரமத்தின் புதிய நிர்வாகக் கட்டிடத்திலுள்ள ஒரு விசாலமான பகுதிக்கு மாற்றப்பட்டது. அப்போதிலிருந்து நாங்கள் அப்யாசிகளுக்காக மட்டுமின்றி, நமது சேவையை நாடி வரும் மணப்பாக்கத்தைச் சுற்றியுள்ள மக்களுக்கும் மருத்துவ உதவி அளித்து வருகிறோம். தினமும் கிட்டத்தட்ட 100 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.



இந்த இலவச மருத்துவ மையத்தில் தொடர்ந்து பணி நடைபெற, சேவைபுரிய விருப்பமுள்ள மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். இங்கு நடைபெறும் பணிகளை நேரடியாக அறிந்துகொள்ளவும், அவற்றில் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும், அதன் மூலம், தங்களது மையங்களில் அவற்றை அவர்கள் செயல்படுத்தவும் பயிற்சிமுகாம் ஒன்று இங்கு நடத்தப்படும். நடைமுறையில் தொழில் ரீதியாக மருத்துவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, குறைந்தது 15 நாட்களிலிருந்து அதிகபட்சம் 30 நாட்கள் வரை அவர்கள் இங்கு தங்கி சேவை செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### தன்னார்வத் தொண்டர்களுக்கான தகுதிகள் :

1. குறைந்தது 2 வருடங்களாகவாவது சகஜ மார்க்கப் பயிற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
2. ஆசிரமத்திலேயே தங்கவும், பயணச் செலவுகளைத் தாங்களே ஏற்கவும் விருப்பமுள்ளவராக இருக்கவேண்டும்.
3. ஒவ்வொரு மாதமும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். பணிபுரிய விரும்பும் தொண்டர்கள், தங்களது பெயர், முகவரி, கல்வித்தகுதி, அவர்களைத் தொடர்புகொள்ளத் தேவையான விவரங்கள், அவர்களது மின்னஞ்சல் முகவரி மற்றும் தொழில் அனுபவம் ஆகியவற்றை சுருக்கமாகத் தருவதுடன், மாதத்தின் எந்தப் பகுதியில் அவர்கள் பங்கேற்க விரும்புகிறார்கள் என்பதையும் தெரிவிக்கவேண்டும்.
4. இங்கு தங்கியிருக்கும்போது, ஆசிரம நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ், இலவச மருத்துவ மையத்தில் மட்டுமே அவர்கள் பணிபுரிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.
5. விண்ணப்பிக்கும்போதே முதல் பகுதியிலா, இரண்டாவது பகுதியிலா அல்லது மாதம் முழுவதுமா என்று சேவை செய்ய விரும்பும் தேதிகளை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

1-4-2008 லிருந்து இந்த திட்டம் செயல்பட இருக்கிறது.

இதைக் குறித்த கேள்விகள்/பதில்/விண்ணப்பம் ஆகியவற்றைகீழ்க்கண்ட முகவரிக்கு கூடிய சீக்கிரம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

டாக்டர் யூ.ரவீந்திரன்,
ஒருங்கிணைப்பாளர், இலவச மருத்துவ மையம்,
பாபூஜி மெமோரியல் ஆசிரமம், மணப்பாக்கம் சென்னை-116.
போன் 42171111 / 9382877974.
மின்னஞ்சல் முகவரி druravindran@gmail.com

*"வேலை ஒருபோதும் கொடுக்கப்படுவதில்லை, அது எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது வேலை செய்வதன் ரகசியங்களில் ஒன்றாகும். எனக்குத் தெரிந்து, மாஸ்டர் யாரையாவது அழைத்து வேலை கொடுப்பது என்பது ஒருபோதும் கிடையாது. ஆனால் யாராவது வேலை செய்ய முன்வந்தால், மாஸ்டர் அவருக்கு வேலை கொடுப்பதுடன் அதைச் செய்வதற்கான திறனையும் அளிக்கிறார். மேலும் சேவை புரிவதில் ஒருவர் ஆர்வம் காட்டினால், அவருக்கு முக்கியமான வேலைகளை இன்னும் அதிகமாக அளிப்பார்.*

*குறைந்தபட்சம் ஆன்மீகத்துறையில், வேலையின் ரகசியம் இதுதான் என்பதை நான் மீண்டும் கூறுகிறேன்.'*

*பா.ராஜகோபாலாச்சாரி*
*ஆன்மீகச் சுடர், சிலந்தி வலை - பாகம் 2, ப.341*

## வஸந்த பஞ்சமி விழாக்கள்

மதிப்பிற்குரிய மகோன்னத மாஸ்டர் லாலாஜி மகராஜ் அவர்களின் பிறந்தநாள் விழா அளப்பரிய பக்தி, அன்பு மற்றும் சிரத்தையுடன் நாட்டின் அனைத்து மையங்களிலும் (துணை மையங்கள் உள்பட) கொண்டாடப்பட்டது. ஒரிஸ்ஸா உட்பட பல மாநிலங்களில், எல்லா அப்யாசிகளும் ஒரே இடத்தில் கூடி விழாவைக் கொண்டாடினர். அதேபோல், நாட்டின் பல பெரிய மாநிலங்களிலும், வேறுபல ஜில்லாக்களிலுள்ள அப்யாசிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குழுமி, விழாவைக் கொண்டாடினர்.

விழா தினத்தன்று காலை மற்றும் மாலை, இருவேளையும் சத்சங்கங்கள் நடைபெற்றன. காலை சத்சங்கத்திற்குப் பின்னர், லாலாஜி மகராஜ் அவர்களது வாழ்க்கை பற்றிய உரைகள், 'அவர், ஹுக்கா மற்றும் நான்' வீடியோக்கள் மற்றும் பஜனைப்பாடல்கள் ஆகியவை முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. விழாவிற்கு மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால், பல இடங்களில் விழா தொடர்ந்து இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த கோலா கோகர்ணநாத்தில், ஆசிரமத்தின் சமையலறைக் கட்டிடம் திறக்கப்பட்டது. விழாவைத் தொடர்ந்து, அப்யாசிகளுக்கான அடிப்படை பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது. 42 மையங்களைச் சேர்ந்த 400 அப்யாசிகள் அதில் கலந்து கொண்டனர். பங்கேற்றவர்கள் இந்த முகாமைப் பாராட்டியதுடன், மிகுந்த உற்சாகத்தையும் வெளிப்படுத்தினர்.

இந்தூரில் நடந்த பஸந்த் பஞ்சமி விழாவில், அதைச் சுற்றியுள்ள மஹூ, தேவாஸ், நர்மதா நகர், ஸன்வெர், தார் மற்றும் மாண்டு போன்ற துணை மையங்களிலுள்ள அப்யாசிகள் கலந்து கொண்டனர். ஏறக்குறைய 500 சகோதர, சகோதரி அப்யாசிகள் சத்சங்கத்திற்கு வந்திருந்தனர். தேநீருக்குப் பிறகு, மையத்திலுள்ள குழந்தைகள் பங்கேற்ற, மீராவின் வாழ்க்கை பற்றிய இசை நாடக நிகழ்ச்சி நடந்தது.

இந்தப் புனித நன்னாளில், விழாவில் பங்கேற்ற பல்வேறு மையங்களைச் சார்ந்த அப்யாசிகள் அனைவரும், ஒரு தெய்வீகக் குடையின் நிழலில் இருந்ததைப் போன்ற மிக விசேஷமான சூழலை அனுபவித்தனர். இந்த விழா முடிந்து திரும்பும்போது, அனைவரது இதயத்திலும் நம் அன்பிற்குரிய மாஸ்டர் மீது நன்றியுணர்வு பெருக்கெடுத்தது.

*விகல்ப், சேகர் ராய், ப்ரபாத் குமார்*

## பைட்டன் மையத்தில் தியானக்கூடம்

SRCM, பைட்டன் (முன்பு பிரதிஷ்டானா என்று பெயர்) மையத்தின் வளர்ச்சியில், 2008, பிப்ரவரி 1 ம் தேதி, மிக முக்கியமான நாளாகும். அன்று, ஒரு அப்யாசி சகோதரரின் வீட்டில், தியானத்திற்கென ஒரு இடம் ஒதுக்கப்பட்டு, மையம் துவக்கப்பட்டது.

மகாராஷ்ட்ராவில் ஔரங்காபாத்திற்கு 56 கிலோமீட்டர் தெற்கே, கோதாவரியில், பைட்டன் ஒரு சிறிய ஊராகும். அது சரித்திர பிரசித்திபெற்றது மட்டுமின்றி, பல மகான்களும் வாழ்ந்த இடமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன், பிரசித்தி பெற்ற மஜ்ராத்தி கவிஞரும், மகானுமான ஏகநாத் இங்கு வசித்தார். மேலும் இது, பானுதாஸ், முக்தேஸ்வர் ஆகிய மகான்களும் பிறந்த இடமாகும்.



ஔரங்காபாத், பைட்டனுக்கு மிக அருகிலுள்ள இரயில் மற்றும் விமான நிலையம் ஆகும். ஔரங்காபாத்திலிருந்து பைட்டனிற்கு நல்ல சாலைவழி இணைப்பு உள்ளது. ஊரின் மையத்திலிருந்து தியானக்கூடம், ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. கிட்டத்தட்ட 80 அப்யாசிகள் அதில் அமர முடியும். தியானக்கூடத்தில் முதல் சத்சங்கத்தை மகாராஷ்ட்ர மண்டல பொறுப்பாளர், எஸ். வி. வைத்யா நடத்தினார். சத்சங்கத்தைத் தொடர்ந்து ஆற்றப்பட்ட உரையில், மையத்தின் வளர்ச்சியில் அப்யாசிகள் ஏற்கவேண்டிய பங்கு உணர்த்தப்பட்டது.

மேலும் என்ற ஒன்றை வருங்காலத்தில் இந்த மையத்தில் 'சகஜ நகர்' என்றஒன்றை, உருவாக்க விரும்புவதாகக் கூறினர்.

## சேவாஸ்ரமத்தில் இளைஞர்களுக்கான பயிற்சி முகாம், புது தில்லி

புது தில்லி மையத்தில் "உள்முக விழிப்பூட்டுதல்" குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் 12-01-2008 அன்று நடத்தப்பட்டது. "மனித வாழ்க்கையில் ஆன்மீகத்தின் தேவை மற்றும் திறனுடைய மாஸ்டரால் உள்முகமாக விழிப்பூட்டப்படுதல்" என்ற தலைப்பு பேசுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தப் பயிற்சி முகாமில், 'மாஸ்டர் நமது இதயங்களை மாற்றி, அமைதியான முறையில் எப்படி நம்முள் ஒரு புரட்சியைக் கொண்டு வருகிறார்' என்பது குறித்தும், நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டியது நமது முக்கிய பொறுப்பு என்பது குறித்தும், உரைகள் நிகழ்த்தப்பட்டன.

அப்யாசிகள், குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தலைப்பிற்கேற்ப தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். ஒரு கேள்வி - பதில் நிகழ்ச்சிக்குப் பிறகு, புதையலைத் தேடிக் கண்டுபிடிக்கும் விளையாட்டு நடந்தது. சகஜ மார்க்கம் பற்றிய வினா-விடை நிகழ்ச்சி, இந்தப் பயிற்சி முகாமின் மற்றொரு சுவாரசியமான விஷயமாகும். இந்தப் பயிற்சி முகாம், தில்லி இளைஞர்களுக்கு கற்றுக் கொள்வதற்கான ஒரு நல்ல அனுபவமாகவும், அவர்களை ஊக்குவிப்பதாகவும் இருந்தது.

*விஜயா விட்டல், புது தில்லி*



## ஒளியூட்டும் மையங்கள் – பாபூஜி மெமோரியல் ஆசிரமம், கொல்கத்தா

"இந்த மிஷன் தனது சிறகுகளை அனைத்து திசைகளிலும் விரித்து, சாதனை புரிந்து கொண்டிருக்கிறது. இந்த ஆசிரமம், அதன் பெருமை மிக்க சாதனைகளில் ஒரு அம்சமாக இருக்கிறது. கலையழகுடன் கூடிய, பெரிய பிரம்மாண்டமான கட்டிடங்களாக இருந்தாலும், உண்மையில் அவற்றுள் **உயிர்** இல்லாவிடில், உள்ளீடற்ற செங்கற்களைப்போல், அக்கட்டிடங்கள் பெயரளவிற்கு மட்டுமே இருக்கும். ஆசிரமங்கள், நமக்கு அடைக்கலம் தரும் இடமாக, பரம்பொருளுடன் தொடர்பு கொள்ளும் முயற்சியில் ஆன்மா அமைதியைப் பெறும் இடமாக உருவாக்கப்பட வேண்டும்.'

இவ்வார்த்தைகள், கொல்கத்தாவில், பாபூஜி மெமோரியல் ஆசிரமத் திறப்பு விழா அன்று சகோதரர் அஜய் பட்டர் கூறியவை. சிமெண்ட் மற்றும் செங்கற்களுடன் மட்டுமல்லாமல், இந்தக் கட்டிடம் கணக்கற்ற அப்யாசிகளால், மிகுந்த அன்பு மற்றும் பக்தியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான அஸ்திவாரக்கல், அன்பிற்குரிய மாஸ்டர் அவர்களால், 17-3-2002 அன்று நாட்டப்பட்டது. கட்டிடப் பணி தாமதமாக, நவம்பர் 15ம் தேதிதான் துவங்கியது என்றாலும். பணிகள் மிக விரைவில் முடிக்கப்பட்டு, 25-12-2003 அன்று திறப்பு விழா நடத்தப்பட்டது.

இந்த ஆசிரமம், நகரத்தின் கிழக்குப் பகுதியில் ரூபி ஆஸ்பத்திரிக்குப் பின்னால் அமைந்துள்ளது. விமான நிலையத்திலிருந்து இது சுமார் 18 கிலோமீட்டர் தொலைவிலும், ஹௌரா ரயில்நிலையத்திலிருந்து சுமார் 21 கி.மீ தொலைவிலும் உள்ளது.







48,000 சதுர அடி அளவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆசிரமத்தில், இரண்டு அடுக்குமாடி கட்டிடங்கள் உள்ளன. ஒரு கட்டிடத்தின் கீழ்த்தளத்தில் நிர்வாக விஷயங்களுக்கான அறைகளும், சமையலறையும், அதற்கு எதிரில் உணவுக் கூடமும் உள்ளன. மாஸ்டரின் அழகான காட்டேஜும், கம்பீரமான தியானக் கூடமும், அப்யாசிகளின் அறைகளும் மற்றமேல் தளங்களில் உள்ளன. அப்யாசிகளின் படுக்கையறைகள் தியானகூடத்திற்குக் கீழே கட்டப்பட்டுள்ளன. சகோதர, சகோதரிகளுக்கான கழிவறைகள் வேறொரு கட்டிடத்தில் தனித்தனியாக உள்ளன. கொல்கத்தா ஆசிரமத்தின் மொத்தப் பரப்பளவு பெரிதல்ல என்றாலும், அது புத்தி கூர்மையுடன் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களைச் சுற்றிலும், பசுமையான புல்வெளிப் பரப்பு உள்ளது. புல்வெளியின் ஒரு பகுதியில் குழந்தைகள் விளையாடுவதற்கென, சறுக்குப் பலகை, ஊஞ்சல்கள் மற்றும் கூடைப்பந்து விளையாடுவதற்கான மைதானம் ஆகியவை அமைக்கப்பட உள்ளது.

தியானக் கூடத்திற்கு மாடிப்படிக்கட்டு வழியாகவும், சரிவுப்பாதை வழியாகவும் இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. அது, மிஷன் சின்னத்திலுள்ள பாதையின் பொருளை (சகஜ மார்க்கம்), அதாவது, மலையளவு கஷ்டங்களையும் தடைகளையும் துளைத்துச் சென்று, இறுதியில் நாம் அடையக்கூடிய உச்சநிலையை எட்டும்வரை, ஒவ்வொரு படியிலும் உயர்நிலை அடைவதை விளக்குவதாக உள்ளது.

முதல் தளத்தில், மாஸ்டரது காட்டேஜ் மிகக் கலை ரசனையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவரது படுக்கையறையை ஒட்டி ஒரு விசாலமான வராண்டா இணைக்கப்பட்டுள்ளது.

காட்டேஜிற்குக் கீழேயும், அதற்கு எதிரேயுள்ள உணவுக்கூடத்திலும் ஆர்வமுடன் காத்திருக்கும் அப்யாசிகளைப் பெரிதும் மகிழ்விக்கும் வகையில், மாஸ்டர், அடிக்கடி வெளியே வராந்தாவில் அமர்ந்து, அங்கிருந்து அப்யாசிகளுடன் அளவளாவிக் கொண்டிருப்பார். தியானக்கூடத்திற்கு அருகிலுள்ள புல்வெளிப் பஜ்ப்பில், சலவைக் கல்லினால் ஆன பாபூஜி மகராஜின் சிலை இப்போது சமீபத்தில் வைக்கப்பட்டுள்ளது. யாருடைய அன்பின் நினைவாக இந்த ஆசிரமத்தை நமது அன்பிற்குரிய மாஸ்டர் சமர்ப்பித்துள்ளாரோ, மகோன்னதமான அந்த மாஸ்டருக்கு, இந்த சிலை மிகப் பொருத்தமானதொரு பாராட்டுச் சின்னமாக அமைந்துள்ளது எனலாம்.

மதிப்பிற்குரிய மாஸ்டரது வார்த்தைகளில், "மிகப் பெரிய அளவிலான இந்த மிஷனின் வளர்ச்சியை, கொல்கத்தாவின் இந்த ஆசிரமம் மிகத் தெளிவாக வெளிக்காட்டுவதாக இருக்கிறது. மறைக்க முடியாத இத்தகைய ஒளி மையங்கள் மூலம், நமது மிஷன் பூவுலகம் முழுவதிலும் பிரப்பாசிக்கும்."

இந்த செய்தி மடலுக்கு விண்ணப்பிக்க **http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
என்றஇணையதளத்திற்குச் செல்லவும். கருத்துத் தெரிவித்தல், ஆலோசனைகள் மற்றும் செய்திக் கட்டுரைகளுக்கு **in.newsletter@srcm.org**
இதற்கான அனைத்து உரிமமும் ©2008 ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன் ("SRCM") ற்கு வழங்கப்பட்டுள்ளது.
"Sri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" மற்றும் மிஷனின் குறியீடு அனைத்தும் ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் உரிமைபெற்றசின்னங்களாகும்.

இந்த செய்திமடலில் தேவைக்கேற்ப மாற்றம் செய்யப்படலாம், இது ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் உறுப்பினர்களுக்காகவே வெளியிடப்படுகிறது.